**IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, KUMBAKONAM**

| | | |
|---|---|---|
| **MCOP No. 260/2022** | **நாள் – 27.01.2026** | **சாட்சி – எ.ம.சா.1** |

*Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969).*

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.ஆதித்யவிஷ்வா | தந்தை பெயர் | திரு.சேதுராஜன் |
| ஊர் | தஞ்சாவூர் | தாலுக்கா | தஞ்சாவூர் |
| தொழில் | நிர்வாக அதிகாரி | வயது | 25 |

**முதல் விசாரணை:**

நான் 2ஆம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி 1 ஆக சாட்சியம் அளிக்கிறேன். முதல் நிலை சாட்சியத்திற்கான பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது. அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும், கோப்பின் அடிப்படையில்தான் எனக்கு விவரங்கள் தெரியும் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் இந்த நிர்வாகத்தில் பணியில் இல்லை என்றால் சரிதான். நான் விபத்து சம்பந்தமாக யாரையும் நேரடியாக விசாரணை செய்யவில்லை என்றால் கோப்பில் தேவையானவை இருந்ததால் நான் யாரையும் விசாரணை செய்யவில்லை. மனுதாரர் சாலையின் ஓரமாக நின்றுக்கொண்டிருந்த போது பேருந்து மோதியதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறே முதல் தகவல் அறிக்கையிலும்

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் புகாரின் அடிப்படையில் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. மனுவிலும், முதல் தகவல் அறிக்கையிலும் குறிப்பிடாத பட்சத்தில் மனுதாரர் பேருந்தின் படிக்கட்டில் ஏற முயன்ற போது விழுந்துவிட்டதாக எதன் அடிப்படையில் கூறுகிறேன் என்றால் விபத்து பதிவேட்டின் அடிப்படையில் கூறுகிறேன். விபத்து பதிவேட்டில் இறந்த இளங்கோவன் பேருந்தின் படிக்கட்டில் ஏற முயன்ற போது கீழே விழுந்துவிட்டதாக யார் சொன்னார்கள் என்று அதில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். யார் அவ்வாறு சொன்னதாக விபத்து பதிவேட்டில் குறிப்பிடாத பட்சத்தில் எனது நிரூபண வாக்குமூலத்தில் இளங்கோவன் அவ்வாறு சொன்னதாக நான் குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. அவ்வாறு இளங்கோவன் மருத்துவரிடம் எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. இளங்கோவன் சாலையின் ஓரத்தில் நின்றுக்கொண்டிருந்த போது தான் பேருந்து மோதியது என்றால் சரியல்ல. விபத்து ஏற்பட்டு ஒரு மாதம் கழித்து இளங்கோவன் இறந்ததால் பிரேத பரிசோதனை செய்யப்படவில்லை என்பதால் அவர் விபத்தினால் ஏற்பட்ட காயத்தால் இறக்க வில்லை என்று தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு இறந்து போன இளங்கோவன் எவ்வகையிலும் காரணம் இல்லை என்றால் சரியல்ல. வாகனத்தை ஓட்டிய ஓட்டுனர் தான் மேற்கண்ட விபத்திற்கு காரணம் என்றாலும், அதனால் தான் அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டு அபராதம் செலுத்தியுள்ளார் என்றால் கொடுங்காயம் ஏற்படுத்தியதாக இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு அதன் பேரில் ஓட்டுனர் அபராதம் செலுத்தியதாக சாட்சியம் குறிப்பிட்டுள்ளேன். விபத்திற்கு முழு முதற்காரணம் 1ஆம் எதிர்மனுதாரரின் ஓட்டுனர் என்றாலும், 1ஆம் எதிர்மனுதாரரின் வாகனம்

எங்கள் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதால் மனுதாரருக்கு நாங்கள் இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளோம் என்றாலும், நிர்வாகத்திற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open Court, read over to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

G. MANIKANDARAJA

Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2026.01.27 17:54:54 +0530

Additional Chief Judicial Magistrate,
Kumbakonam.